සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆந் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (I)**

Efficiency Bar Examination for the Officers in Grade III of Sri Lanka Teacher Educators' Service - 2017 (I)

**(01) பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள்**

General Management and Establishments Activities

**ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள்**
One hour 30 minutes

**நான்கு** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக. எல்லா வினாக்களுக்கும் **சமமான** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** கீழே தரப்பட்ட விடயங்களுள் **நான்கைப்** பற்றி சிறு குறிப்பெழுதுக.
   (i) இணைந்த சேவைகள்
   (ii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு
   (iii) மீள வேலைக்கு அமர்த்தல்
   (iv) இடமாற்ற சபை
   (v) பதவியொன்றின் அல்லது பணியாளர் ஒருவரின் தகுநிலை

**2.** அரச நியமனங்களை நெறிப்படுத்தும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை விளக்குக.

**3.** கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைச் சுருக்கமாக விளக்குக.
   (i) அரச சேவையில் இருந்து கேட்டு விலகல்
   (ii) பதவியை கைவிட்டு செல்லல்
   (iii) விடுமுறை நாள் சம்பளங்கள்
   (iv) அரசாங்கத்திற்கு சேவைகளை ஆற்றியமைப்பதற்காகச் செலுத்தப்படும் கட்டணங்கள்

**4.** (i) முதல் நியமனத்தின் போது வழங்கப்படும் சம்பளம் தொடர்பாக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளை விளக்குக.
   (ii) சம்பள அளவுத்திட்டத்தின் மீளாய்வின் போது வழங்கப்படும் சம்பளம் தொடர்பான ஏற்பாடுகள் எவை?

**5.** (i) மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பாக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் எவை?
   (ii) மேலதிக நேர கொடுப்பனவை வழங்கக்கூடிய சந்தர்ப்பத்தை விளக்குக.

**6.** (i) நிருவாக நடைமுறைகளும் செயல்முறைகளும் தொடர்பான பொதுவான நிபந்தனைகளை விளக்குக.
   (ii) கடமை ரீதியான கடிதங்கள் தொடர்பான விதிகள் எவை?

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆந் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான**
**வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (I)**

Efficiency Bar Examination for the Officers in Grade III of Sri Lanka
Teacher Educators' Service - 2017 (I)

**(02) நிதி ஒழுங்குக் கோவை**
Financial Regulations

**ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள்**
One hour 30 minutes

**நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. எல்லா வினாக்களுக்கும் **சமமான** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** (i) நிதி அமைச்சரினால் விநியோகிக்கப்படுகின்ற **நான்கு** ஆணைச்சீட்டு வகைகளைப் பெயரிட்டு அவை ஒவ்வொன்றினதும் குறிக்கோளைக் குறிப்பிடுக.

(ii) நிதிப் பிரமாணங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சனாதிபதிக்கு திரட்டு நிதியத்தில் இருந்து பணத்தை விடுவிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள **இரு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(iii) நிதிப் பிரமாணங்களிலே குறிப்பிட்டவாறு முற்பணக் கணக்கு வகைகள் **ஐந்தைப்** பெயரிடுக.

**2.** (i) அரச வருமான மதிப்பீடுகளை மேற்கொள்ளும் போது தவிர்க்கப்படும் **ஐந்து** உருப்படிகளைக் குறிப்பிடுக.

(ii) நி.பி. 104 (4) இன் கீழே அரச சொத்துக்களுக்கு நட்டம் / விபத்து ஏற்படும் போது முன்வைக்கப்படவேண்டிய "முழுமையான அறிக்கையிலே" உள்ளடக்கப்படக்கூடிய விடயங்கள் எவை?

**3.** (i) முற்பணக் கணக்குகளுக்குரிய மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய **நான்கு** எல்லை வகைகள் எவை?

(ii) உற்பத்திச் செயன்முறைகள் தொடர்பாக முற்பணக் கணக்குகளில் நிதி வருடத்தின் இறுதியிலே தயாரிக்கப்பட வேண்டிய கணக்கு அறிக்கைகள் **நான்கைப்** பெயரிடுக.

(iii) மாதாந்தம் சம்பளம் பெறுகின்ற நிரந்தரமான அரச அலுவலர் ஒருவர் தமது சம்பளத்தின் பகுதியை சம்பளம் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நாளுக்கு முன்னர் பெற்றுக் கொள்ள முடியும். இது தொடர்பாக நிதிப்பிரமாணங்களில் குறிப்பிடப்படும் நியதிகள் எவை?

**4.** (i) நி.பி. 8 இன் பிரகாரம் பாதீட்டு மதிப்பீட்டொன்றில் உள்ளடக்கப்படும் செலவு விடயங்களில் குறிப்பிடப்படும் பாதீட்டு வகைப்படுத்தல் அலகுகள் எவை?

(ii) நி.பி. 71 இற்கேற்ப பதவி, ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் சம்பள திட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளும் போது எவ் விடயங்கள் தொடர்பாக திறைசேரியின் பிரதிச் செயலாளரின் முன் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளவேண்டும்?

(iii) பாதீட்டு மதிப்பீடுகளிலே மூலதன ஒதுக்கங்களின் கீழே ஒதுக்கப்படும் செலவு விடயங்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக.

**5.** (i) அரச திணைக்களமொன்றின் கணக்குப் பிரிவிலே கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் வேறுபட்ட வகையிலான வவுச்சர்களில் **ஆறு** வகைகளை அவற்றின் பொதுப் படிவ இலக்கங்களுடன் குறிப்பிடுக.

(ii) அரச அலுவலர் ஒருவரினது சம்பளம் அல்லது கூலியில் இருந்து சட்டரீதியாக கழிக்கப்படும் **நான்கு** கழிவுகளைக் குறிப்பிடுக.

**6.** சுருக்கக் குறிப்புக்கள் எழுதுக.

(i) வீரமன் நடைமுறை

(ii) மீண்டெழும் செலவு

(iii) எதிர்பாராத நிதியம் (Contingencies fund)

(iv) மேலதிக கட்டணம் (Surcharges)

(v) உயிர் வாழ்சான்றிதழ்

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ... සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது ]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆந் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (I)**

Efficiency Bar Examination for the Officers in Grade III of Sri Lanka Teacher Educators' Service - 2017 (I)

**(03) கல்வி மறுசீரமைப்பு மற்றும் கல்விச் சட்டம்**

Educational Reforms and Education Law

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

முதலாவது வினா உட்பட **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**1.** (i) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் VI ஆவது அத்தியாயத்தின் கீழ் அரசின் கொள்கை அமுலாக்கத்தின் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை கடமைகளின் கீழ் கல்வி தொடர்பாக உள்ள குறிக்கோள்கள் எவை?

(ii) அரசியலமைப்பு சட்டத்தின் 13 ஆவது திருத்திற்கு ஏற்ப மாகாண கல்விக் குழுக்களை நிறுவும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஏற்பாடுகள் எவை?

(iii) 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைகள் சட்டத்திற்கு ஏற்ப இரகசிய ஆவணங்களாகக் கருதப்படும் ஆவணங்கள் எவை?

(iv) தேசிய கல்வி நிறுவகத்தின் சட்டத்தின் கீழே நியமிக்கப்படுகின்ற அதன் நிர்வாகக் குழுவின் கூட்டினை தெளிவுப்படுத்துக.

(v) 1972 ஆம் ஆண்டு கல்வி மறுசீரமைப்பின் கீழே கனிஷ்ட இடைநிலை பிரிவு மாணவர்களுக்கு செயற்பாட்டு மற்றும் தொழிநுட்ப தேர்ச்சிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக கலைத்திட்டத்தில் அடங்கியுள்ள பாடங்கள் எவை?

(vi) 1981 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளையறிக்கையின்படி நிறுவப்பட்டுள்ள பாடசாலை கொத்தணி எண்ணக்கருவினை சுருக்கமாக விளக்குக.

(vii) தற்போது க.பொ.த(சா.த) மாணவனொருவனால் பயிலக்கூடிய கருப் பாடங்கள் எவை?

(viii) 2007 ஆம் ஆண்டிலே பாடசாலைகளுக்கு அறிமுகஞ் செய்யப்பட்ட கலைத்திட்டமானது தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டமாக அறியப்படும். இங்கு 'தேர்ச்சிகள்' என்பதை வரையறுக்குக.

(ix) தேசிய ஆசிரியர் கல்விக் கல்லூரிகள் தொடர்பாக தேசிய கல்வி நிறுவகத்தினால் செயற்படுத்த் வேண்டிய விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(x) கல்வி அமைச்சிற்கு கிடைக்கின்ற வெளிநாட்டு உதவிகளின் பாவனைக்காக காணப்பட்ட "செயற்திட்ட முறைமை" (project mode) க்குப் பதிலாக கல்வித்துறை அபிவிருத்தி திட்டமிடல் முறைமையைப் (Education Sector Development Programme) பயன்படுத்துவதற்கு கல்வி அமைச்சு முனைந்துள்ளது. இப்புதிய முறைமையின் பிரதான பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

*(04 × 10 = 40 புள்ளிகள்)*

2. (i) 'பாடசாலை சார் முகாமைத்துவம்' என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(ii) இந்த எண்ணக்கருவை செயற்படுத்துவதற்காக தற்போது இலங்கையின் பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ள கட்டமைப்புகளை சுருக்கமாகக் குறிப்படுக.

(iii) 'பாடசாலை சார் ஆசிரியர் அபிவிருத்திக்காக' அதிபர் ஒருவருக்கு எடுக்கக்கூடிய வழிமுறைகள் **இரண்டை** விளக்குக.

(iv) 'பாடசாலை சமூகம்' என்பதற்குரிய நபர்கள் யார்?

*(20 புள்ளிகள்)*

3. (i) இலங்கையின் கல்விப் புலத்தினுள் முன்சேவை ஆசிரியர் பயிற்சியை பெற்றுக் கொடுக்கும் நிறுவனங்களைப் பெயரிடுக.

(ii) இலங்கையின் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு சேவைக்காலப் பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்காக செயற்படுத்தப்படும் **இரு** வேலைத்திட்டங்களை சுருக்கமாக விளக்குக.

(iii) சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களின் கடமையை வினைத்திறனாக பெற்றுக் கொள்வதற்காக எடுக்கக்கூடிய படிமுறைகள் **இரண்டை** சுருக்கமாக விளக்குக.

(iv) ஆசிரியர் சேவையானது தொழில்சார்ந்த சேவையொன்றாக ஏற்றுக் கொள்வதற்காக எடுக்கக்கூடிய செயன்முறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

*(20 புள்ளிகள்)*

4. (i) தேசிய கல்வி ஆணைக்குழுவை அமைப்பதற்கு உதவிய பின்புலத்தை விளக்குக.

(ii) அந்த ஆணைக்குழுவினது கூட்டினைக் குறிப்பிடுக.

(iii) 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுவின் சட்டத்திற்கேற்ப தேசிய கல்வி கொள்கையில் உள்ளடக்கப்படக்கூடிய புலங்கள் **ஐந்தைப்** பெயரிடுக.

(iv) தேசிய கல்வி ஆணைக்குழுவினது சுயாதீனத் தன்மையை உறுதி செய்து கொள்வதற்காக அந்தச் சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகள் எவை?

*(20 புள்ளிகள்)*

5. 1987 ஆம் ஆண்டின் பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு பரவல்படுத்தப்பட்ட அதிகாரங்களுக்கு ஏற்ப,

(i) மாகாண சபை பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கும் செயற்பாடுகளை விளக்குக.

(ii) மாகாண சபை பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிப்பதற்கு மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்கள் எவை?

(iii) மாகாண சபை பாடசாலைகளில் கடமைபுரியும் அலுவலர்களினது நன்னடத்தை செயற்பாடுகளில் காணப்படும் நிலைமைகளை விளக்குக.

(iv) மாகாண சபை பாடசாலைகளில் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காகவும் கலைத்திட்டம் சம்பந்தமாகவும் மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்கள் எவை?

*(20 புள்ளிகள்)*

***